கவனிக்க.- 05.08.2011 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி IV (அ) பிறகாிக்கப்படவில்லை.

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1719 - 2011 අගෝස්තු මස 12 වැනි සිකුරාදා - 2011.08.12

*1719 ஆம் இலக்கம் - 2011 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 12 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| சனாதிபதியின் பிரகடனங்களும் பிறவும் | - |
| சனாதிபதியின் நியமனங்களும் பிறவும் | 560 |
| அமைச்சரவையின் நியமனங்களும் பிறவும் | - |
| அரசாங்க ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் | - |
| நீதிச்சேவை ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் | - |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | - |
| பதிவாளர் நியமனங்களும் பிறவும் | - |
| அரசாங்க அறிவித்தல்கள் | 560 |
| விலைக் கட்டளைகள் | - |
| இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள் | - |
| இலங்கை அரசாங்க கணக்கு விபரங்கள் | - |
| வரவு செலவுத் திரட்டுக்கள் | - |
| அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள் | 563 |
| மாலுமிகளுக்கு அறிவித்தல்கள் | - |
| மதுவரிக் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

## முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தில், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் அறிவித்தல் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை - நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கான விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்,** அதாவது 2011, ஓகத்து மாதம் 19 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2011, ஓகத்து மாதம் 05 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**லக்ஷ்மன் குணவர்தன,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2011 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.

## சனாதிபதியின் நியமனங்களும் பிறவும்

டீவீஎப்/ஆர்ஈசீரீ/278/44/ ஏவை.

**இலங்கைத் தரைப்படை - தொண்டர் படை**

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட அபகீர்த்தியாக அதிகாரவாணையிலிருந்து அகற்றுதல்

**அபகீர்த்தியாக அதிகாரவாணையிலிருந்து அகற்றுதல்**

பின்வரும் பெயருடைய உத்தியோகத்தர் 2009, நவெம்பர் மாதம் 14 ஆந் திகதியிலிருந்து அமுலிலிருக்கும் விதம் இலங்கைத் தரைப்படையின் தொண்டர் படையிலிருந்து அபகீர்த்தியாக அதிகாரவாணையிலிருந்து அகற்றுதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது :-

இரண்டாம் லெப்டினனன்ட் கம்லத் லியனகே ரஞ்சித் இந்துநில், இதேபாபஅ (உ/6086)

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கோட்டாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பு அமைச்சு.

பாதுகாப்பு அமைச்சு,
கொழும்பு,
2010, ஏப்பிறல் 12.

8-344

டீவீஎப்/ஆர்ஈசீரீ/278/49/ஏவை.

**இலங்கைத் தரைப்படை - தொண்டர் படை**

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட அபகீர்த்தியாக அதிகாரவாணையிலிருந்து அகற்றுதல்

**அபகீர்த்தியாக அதிகாரவாணையிலிருந்து அகற்றுதல்**

பின்வரும் பெயருடைய உத்தியோகத்தர் 2009, திசெம்பர் மாதம் 22 ஆந் திகதியிலிருந்து அமுலிலிருக்கும் விதம் இலங்கைத் தரைப்படையின் தொண்டர் படையிலிருந்து அபகீர்த்தியாக அதிகாரவாணையிலிருந்து அகற்றுதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது :-

கப்ரின் மாரசிங்ஹ முதியன்சேலாகே அஜித் ரணசிங்க, இபொ (உ/5851)

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கோட்டாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பு அமைச்சு.

பாதுகாப்பு அமைச்சு,
கொழும்பு,
2010, மே 10.

8-345

## அரசாங்க அறிவித்தல்கள்

ச. வ. பீ. 277/40

**(188 ஆம் அத்தியாயமான) தொல்பொருள் கட்டளைச் சட்டம்**

18 ஆம் பிரிவின் கீழான கட்டளை

(188 ஆம் அத்தியாயமான) தொல்பொருள் கட்டளைச் சட்டம் 18 ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக் கொண்டு தேசிய மரபுரிமை அமைச்சர் ஜகத் பாலசூரிய ஆகிய நான் மேற்படி கட்டளைச் சட்டத்தின் 18 ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்டு 2005, யூலை 08 ஆந் திகதிய 1401 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட கட்டளையின் 174 ஆம் விடயம் அத்தகைய கட்டளையால் "பாதுகாக்கப்பட்ட நினைவுச் சின்னங்கள்" என வெளிப்படுத்தப்பட்ட நினைவுச் சின்னங்களின் நிரலிலிருந்து அகற்றப்பட வேண்டும் என இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

கலாநிதி ஜகத் பாலசூரிய,
தேசிய மரபுரிமைகள் அமைச்சர்.

கொழும்பு,
2011.06.23.

8-356/1

ச. வ. பீ. 277/40

**(188 ஆம் அத்தியாயமான) தொல்பொருள் கட்டளைச் சட்டம்**

18 ஆம் பிரிவின் கீழான கட்டளை

(188 ஆம் அத்தியாயமான) தொல்பொருள் கட்டளைச் சட்டம் 18 ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக் கொண்டு கலாசார அலுவல்கள் மற்றும் தேசிய மரபுரிமை அமைச்சரால் 2005, யூலை 08 ஆந் திகதிய 1486 ஆம் இலக்க வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்டுள்ள மேற் கூறிய கட்டளைச் சட்டத்தின் 18 ஆம் கூற்றின் கீழே "பாதுகாக்கப்பட்ட நினைவுச் சின்னங்கள்" என விதிக்கப்பட்ட 32 ஆம் உருப்படிவை நினைவுச் சின்னப் பட்டியலில் இருந்து அகற்றப்பட வேண்டுமென இக்கட்டளையின் மூலம் இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது

கலாநிதி ஜகத் பாலசூரிய,
தேசிய மரபுரிமைகள் அமைச்சர்.

கொழும்பு,
2011.06.23.

8-356/2

## காணிப் பதிவேடு (மீட்டெழுதிய இருமடித்தாள்) கட்டளைச் சட்டத்தின் கீழான அறவித்தல் (அத்தியாயம் 120)

கீழ் குறிப்பிடப்பட்ட பட்டோலையில் காணப்படும் 2 ஆம் நிரலில் விபரிக்கப்படும் காணிகள் 01 ஆம் நிரலில் காணப்படுவதும் கிழிந்தோ அல்லது காணாமலோ போயிருக்கும் இருமடித்தாள்கள் சம்பந்தமான 03 ஆம் நிரலில் காணப்படும் உறுதிகளிலிருந்து தற்காலிகமாக காணிப்பதிவேடு (மீட்டெழுதிய இருமடித்தாள்) கட்டளைச் சட்டம் (அத்தியாயம் 120) 04 ஆம் பிரிவின் கீழ் மீள அமைக்கப்பட்டிருக்கிறது.

02. 2011.08.15 ஆந் திகதி தொடக்கம் 2011.08.29 ஆந் திகதி வரை அனைத்து வேலை நாட்களிலும் மு. ப. 10.00 மணி தொடக்கம் பி. ப. 3.00 மணி வரையிலான காலப்பகுதியில் திருத்தியமைக்கப்படவிருக்கும் இருமடித்தாள்களை விரும்பியவர்கள் பார்வையிடுவதற்கு கொழும்பு காணிப்பதிவகத்தில் வைத்திருக்கப்படும்.

03. திருத்தியமைக்கப்படவிருக்கும் இருமடித்தாள்களில் சேர்க்கப்பட்டிருக்கும் ஏதேனும் விபரங்கள் தொடர்பான பதிவு சம்பந்தமான ஆட்சேபனையை தாக்கல் செய்யவோ அல்லது தவறாக விடப்பட்டிருக்கும் விபரங்கள் அல்லது பதிவுகள் சேர்க்கப்பட வேண்டுமெனவோ விரும்பின் அவை தொடர்பான முறைப்பாடுகளை அல்லது கோரிக்கைகளை செய்வோர் கீழே கையொப்பம் இட்டுள்ளவரது பெயருக்கு எழுத்து மூலம் 2011.09.05 ஆந் திகதிக்கு முன்னர் பதிவுத் தபால் மூலம் பதிவாளர் நாயகத்தின் அலுவலகத்திற்கு அனுப்புதல் வேண்டும். ஆட்சேபனைகள் அல்லது கோரிக்கைகள் ஆவண ரீதியாக ஆதாரங்களுடன் அனுப்பப்படல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

எனது இல.: என்பீ 11/02/16/2011/பிடு/ஸு,
பதிவாளர் நாயகம் திணைக்களம்,
234/ஏ3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை.

**அட்டவணை**

| காணி பதிவு செய்யப்பட்ட ஏடுகளில் அழிந்துபோன பக்கங்களின் விபரம் | காணியின் விபரம் | பதிவு செய்யப்பட்ட உறுதிகளின் விபரம் |
|---|---|---|
| கொழும்பு மாவட்டத்தில் கொழும்பு காணிப் பதிவகத்தில் "Con A" பிரிவில் 121 ஆம் காண்டத்தில் 113-114 ஆம் இலக்க ஏடுகள் | மேல் மாகாண சபையின் கொழும்பு மாவட்டத்தின் கொழும்பு மாநகர சபை எல்லைக்குள் அமைந்துள்ள டிக்மன் வீதியில் அமைந்துள்ள வரிமதிப்பீட்டிலக்கம் 14-4/1 எனும் வர்க்க அடி 1069, நிலப்பரப்பு உடைய இடத்தினை சீ. சீவரத்னம் நில அளவீட்டாளரினால் 2000.04.07 ஆந் திகதிய 352 ஆம் இலக்க அளவீட்டின் பிரகாரம் காட்டப்பட்ட D1 என்னும் அலகிற்கு அளவீட்டின் பிரகாரம் எல்லைகள்:-<br>வடக்கு : CE4 மற்றும் CE4 திறந்த வெளி மற்றும் அலகு D2. CE4(SW), CE 29 மற்றும் இவ் அலகிற்கிடையிலான சுவரின் நடுப்பாகம்;<br>கிழக்கு : CE16 இன் திறந்த வெளி மற்றும் தனியார் வீதி உடன் கூடிய இவ் அலகின் சுவர் ;<br>தெற்கு : CE8 இன் திறந்த வெளி மற்றும் இவ் அலகுகளுக்கிடையிலான சுவரின் மத்தி;<br>மேற்கு : CE18 இன் திறந்த வெளி மற்றும் டிக்மன் வீதியில் வரிமதிப்பீட்டு இல்கம் 12 உடைய இவ் அலகின் சுவர்;<br>மேல் : இவ் அலகின் மேலான E1 கொங்கிறீட் நிலப்பரப்பின் மத்தி;<br>கீழ் : அலகு C1 மேலான இவ் அலகின் கொங்கிரீட் நிலப்பரப்பின் மத்தி. | 1. ஜீ. ஆர். எம். பண்டார பி. நொ. ஆல் சான்றுப்படுத்தப்பட்ட 2004.01.23 ஆந் திகதிய 1374ஆம் இலக்க ஈட்டு இரத்துச் செய்தல் உறுதி.<br>2. ஜீ. ஆர். எம். பண்டார பி. நொ. ஆல் சான்றுப்படுத்தப்பட்ட 2004.01.23 ஆந் திகதிய 1523ஆம் இலக்க அறுதி உறுதி.<br>3. கே. குலசிங்கம் பி. நொ. ஆல் சான்றுப்படுத்தப்பட்ட 2004.04.08 ஆந் திகதிய 1381 ஆம் இலக்க அறுதி உறுதி.<br>4. கே. குலசிங்கம் பி. நொ. ஆல் சான்றுப்படுத்தப்பட்ட 2004.04.08 ஆந் திகதிய 1382 ஆம் இலக்க உடன்படிக்கை உறுதி.<br>5. கே. குலசிங்கம் பி. நொ. ஆல் சான்றுப்படுத்தப்பட்ட 2004.06.07 ஆந் திகதிய 1431ஆம் இலக்க பிரதிக்கினை உறுதி. |

## காணிப் பதிவேடு (மீட்டெழுதிய இருமடித்தாள்) கட்டளைச் சட்டத்தின் கீழான அறவித்தல் (அத்தியாயம் 120)

*கீழ் குறிப்பிடப்பட்ட பட்டோலையில் காணப்படும் 2 ஆம் நிரலில் விபரிக்கப்படும் காணிகள் 01 ஆம் நிரலில் காணப்படுவதும் கிழிந்தோ அல்லது காணாமலோ போயிருக்கும் இருமடித்தாள்கள் சம்பந்தமான 03 ஆம் நிரலில் காணப்படும் உறுதிகளிலிருந்து தற்காலிகமாக காணிப்பதிவேடு (மீட்டெழுதிய இருமடித்தாள்) கட்டளைச் சட்டம் (அத்தியாயம் 120) 04 ஆம் பிரிவின் கீழ் மீள அமைக்கப்பட்டிருக்கிறது.*

*02. 2011.08.15 ஆந் திகதி தொடக்கம் 2011.08.29 ஆந் திகதி வரை அனைத்து வேலை நாட்களிலும் மு. ப. 10.00 மணி தொடக்கம் பி. ப. 3.00 மணி வரையிலான காலப்பகுதியில் திருத்தியமைக்கப்படவிருக்கும் இருமடித்தாள்களை விரும்பியவர்கள் பார்வையிடுவதற்கு நுகேகொடை (தெல்கந்த) காணிப்பதிவகத்தில் வைத்திருக்கப்படும்.*

*03. திருத்தியமைக்கப்படவிருக்கும் இருமடித்தாள்களில் சேர்க்கப்படவிருக்கும் ஏதேனும் விபரங்கள் தொடர்பான பதிவு சம்பந்தமாக எலரேனுப் ஆட்சேபனையினை தாக்கல் செய்யவோ அல்லது தவறாக விடப்பட்டிருக்கும் விபரங்களை அல்லது பதிவுகளை சேர்க்கப்பட வேண்டுமெனவோ விரும்பின் அவை தொடர்பான குறைபாடுகளை அல்லது கோரிக்கைகளை செய்வோர் கீழே கையொப்பம் இடப்பட்டவரது பெயருக்கு எழுத்து மூலம் 2011.09.05 ஆந் திகதிக்கு முன்னர் பதிவுத் தபால் மூலம் பதிவாளர் நாயகத்தின் அலுவலகத்திற்கு அனுப்புதல் வேண்டும். ஆட்சேபனைகள் அல்லது கோரிக்கைகள் ஆவண ரீதியாக ஆதாரங்களுடன் அனுப்பப்படல் வேண்டும்.*

*ஈ. எம். குணசேகர,*
*பதிவாளர் நாயகம்.*

*எனது இல.: பி. எம் 11/02/17/2011/පිටු/සැ*
*பதிவாளர் நாயகம் திணைக்களம்,*
*234/ஏ3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,*
*பத்தரமுல்லை.*

### அட்டவணை

| *காணி பதிவு செய்யப்பட்ட ஏடுகளில் அழிந்துபோன பக்கங்களின் விபரம்* | *காணியின் விபரம்* | *பதிவு செய்யப்பட்ட உறுதிகளின் விபரம்* |
|---|---|---|
| *கொழும்பு மாவட்டத்தின் நுகேகொடை தெல்கந்தை காணிப்பதிவகத்தில் "M" எனும் பிரிவில் 658 ஆம் காண்டத்தில் 250 ஆம் இலக்க ஏடுகள்* | *மேல்மாகாண மாகாண சபையின் கொழும்பு மாவட்டத்தின் சல்பிட்டி கோறளை யின் பல்லேபத்துவ கோட்டை மாநகர சபை எல்லைக்குள் பாகொட எனும் கிராமத்தில் அமைந்துள்ள தெல்கஹா குருந்துவத்தை எனும் இடத்தினை அளவிட்டு பிரிக்கப்பட்ட 0ஏ. 0றூ. 6.3/4 விசாலமுடைய சீ. ஆர். ஹாடிங் நிலஅளவீட்டாளரினால் 1945.01.07 ஆந் திகதி 349 ஆம் இலக்க அளவீட்டின் பிரகாரம் C என்னும் இலக்க காணித் துண்டின் எல்லைகள்:-*<br><br>வடக்கு : இந்த இடத்தின் லொட் B என்னும் காணித்துண்டு ;<br>கிழக்கு : இந்த இடத்தின் லொட் D என்னும் காணித்துண்டு ;<br>தெற்கு : லொட் F என்னும் பாதைக்காக பிரிக்கப்பட்ட நிலம்;<br>மேற்கு : இந்த இடத்தின் லொட் B என்னும் காணித்துண்டு. | *1. ஜே. ஈ. செனவிரத்ன பி. நொ. ஆல் சான்றுப்படுத்தப்பட்ட 1959.07.12 ஆந் திகதிய 31ஆம் இலக்க அறுதி உறுதி.*<br><br>*2. டீ. எஸ். ஜயவர்தன பி. நொ. ஆல் சான்றுப்படுத்தப்பட்ட 1984.02.02 ஆந் திகதிய 479 ஆம் இலக்க அறுதி உறுதி.* |

*8-272*

---

## காணிப் பதிவேடு (மீட்டெழுதிய இருமடித்தாள்) கட்டளைச் சட்டத்தின் கீழான அறவித்தல் (அத்தியாயம் 120)

*கீழ் குறிப்பிடப்பட்ட பட்டோலையில் காணப்படும் 2 ஆம் நிரலில் விபரிக்கப்படும் காணிகள் 01 ஆம் நிரலில் காணப்படுவதும் கிழிந்தோ அல்லது காணாமலோ போயிருக்கும் இருமடித்தாள்கள் சம்பந்தமான 03 ஆம் நிரலில் காணப்படும் உறுதிகளிலிருந்து தற்காலிகமாக காணிப்பதிவேடு (மீட்டெழுதிய இருமடித்தாள்) கட்டளைச் சட்டம் (அத்தியாயம் 120) 04 ஆம் பிரிவின் கீழ் மீள அமைக்கப்பட்டிருக்கிறது.*

*02. 2011.08.15 ஆந் திகதி தொடக்கம் 2011.08.29 ஆந் திகதி வரை அனைத்து வேலை நாட்களிலும் மு. ப. 10.00 மணி தொடக்கம் பி. ப. 3.00 மணி வரையிலான காலப்பகுதியில் திருத்தியமைக்கப்படவிருக்கும் இருமடித்தாள்களை விரும்பியவர்கள் பார்வையிடுவதற்கு கொழும்பு காணிப்பதிவகத்தில் வைத்திருக்கப்படும்.*

*03. திருத்தியமைக்கப்படவிருக்கும் இருமடித்தாள்களில் சேர்க்கப்படவிருக்கும் ஏதேனும் விபரங்கள் தொடர்பான பதிவு சம்பந்தமானக எவரேனும் ஆட்சேபனையினை தாக்கல் செய்யவோ அல்லது தவறாக விடப்பட்டிருக்கும் விபரங்கள் அல்லது பதிவுகள் சேர்க்கப்பட வேண்டுமெனவோ விரும்பின் அவை தொடர்பான முறைப்பாடுகளை அல்லது கோரிக்கைகளைச் செய்வோர் கீழே கையொப்பம் இடப்பட்டவரது பெயருக்கு எழுத்து மூலம் 2011.09.05 ஆந் திகதிக்கு முன்னர் பதிவுத் தபால் மூலம் பதிவாளர் நாயகத்தின் அலுவலகத்திற்கு அனுப்புதல் வேண்டும். ஆட்சேபனைகள் அல்லது கோரிக்கைகள் ஆவண ரீதியாக ஆதாரங்களுடன் அனுப்பப்படல் வேண்டும்.*

**அட்டவணை**

| *காணி பதிவு செய்யப்பட்ட ஏடுகளில் அழிந்துபோன பக்கங்களின் விபரம்* | *காணியின் விபரம்* | *பதிவு செய்யப்பட்ட உறுதிகளின் விபரம்* |
|---|---|---|
| கொழும்பு மாவட்டத்தின் கொழும்பு காணிப் பதிவகத்தில் "A" எனும் பிரிவில் *423* ஆம் காண்டத்தில் *296*ஆம் இலக்க ஏடு. | மேல் மாகாண சபையின் கொழும்பு மாவட்டத்தின் கொழும்பு மாநகர சபை எல்லைக்குள் பம்பலபிட்டிய பொலிஸ் பார்க் இடத்தில் *87*ஆவது ஒழுங்கையில் அமைந்துள்ள வரிமதிப்பீட்டிலக்கம் *04* கெலிங்னோர் எனும் இடத்தினை அளவிட்டு பிரிக்கப்பட்ட *0*ஏ. *0*றூ. *30*பே. விஸ்தீரணமுடைய □*3* இலக்கமுடைய காணித்துண்டிற்கு சீ. சீ. விஜேதுங்க நிலஅளவீட்டாளரினால் அளவிட்டு பிரிக்கப்பட்ட *1930.11.17* ஆந் திகதிய *2221*□ ஆம் இலக்க அளவீட்டின் பிரகாரம் எல்லைகள்:-<br><br>வடக்கு : லொட் □*2* ;<br>கிழக்கு : ரோமான் கத்தோலிக்க தேவாலயத்துக்குரிய ஆதனம் ;<br>தெற்கு : லொட் B ;<br>மேற்கு : பாதைக்காக ஒதுக்கப்பட்ட நிலப்பரப்பு. | *1.* ஏ. ஆரியரத்ன பி. நொ. ஆல் சான்றுப்படுத்தப்பட்ட *1963.03.05* ஆந் திகதிய *1100* ஆம் இலக்க நன்கொடை உறுதி.<br><br>*2.* பீ. எம். எப். விஜேசூரிய பி. நொ. ஆல் சான்றுப்படுத்தப்பட்ட *1987.12.01* ஆந் திகதிய *316* ஆம் இலக்க நன்கொடை உறுதி. |

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

எனது இல.: என்பீ *11/02/18/2011*/பிடு/ஸஉ,
பதிவாளர் நாயகம் திணைக்களம்,
*234*/ஏ*3*, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை.

*8-273*

# அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள்

**சம்பத் வங்கி பீஎல்சீ**

(முன்பு சம்பத் வங்கி லிமிட்டெட் என அழைக்கப்பட்டது)

*1990* ஆம் ஆண்டின் *04* ஆம் இலக்க வங்கிக் கடன் மீட்பு (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் *9* ஆம் பிரிவின் கீழ் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர்கள் சபையினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம்

கணக்கு இல. : *0029 3000 3215* - த கண்டி டயர் ஹவுஸ் (பிறைவேட்) லிமிட்டெட்

*2011*, மார்ச் *30* ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் விசேடமாகவும் ஏகமனதாகவும் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் :-

"PQ *144* எனும் கம்பனி இலக்கத்தைக் கொண்ட சம்பத் வங்கி பீஎல்சீ சார்பாக கொழும்பு பிரசித்த நொத்தாரிசு எஸ். வீ. ஈ. விஜேதுங்க என்பவரால் எழுதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட *1994*, மார்ச் *31* ஆந் திகதியிடப்பட்ட இல. *819*, டீ. பீ. எல். எச். எச். சில்வா என்பவரால் எழுதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட *2004*, மே *25* ஆந் திகதியிடப்பட்ட இல. *2860*, ஜீ. பி. ஐ. உதயங்கனீ என்பவரால் எழுதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட *2007*, ஒற்றோபர் *30* ஆந் திகதியிடப்பட்ட இல *204*, ஏ. எம். கே. ஏ. குணதிலக்க என்பவரால் எழுதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட *1995*, திசெம்பர் *21* ஆந் திகதியிடப்பட்ட இல. *1252*, டீ. பீ. எல். எச். எச். சில்வா என்பவரால் எழுதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட *2004*, மே *25* ஆந் திகதியிடப்பட்ட இல. *2863* மற்றும் ஜீ. பி. ஐ. உதயங்கனீ என்பவரால் எழுதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட*2007*, ஒற்றோபர் *30* ஆந் திகதியிடப்பட்ட இல. *202* எனும் ஈட்டு முறிகளின் மீது அடகுவைக்கப்பட்டு பிணையாக இங்கு அட்டவணையில் நேர்த்தியாக விபரிக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகள், மீது பெற்றுக்கொண்ட கடனை, கடன்பட்டார் என்ற வகையில், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் கம்பனிச் சட்டங்களுக்கு அமைவாக நேர்த்தியாக கூட்டிணைக்கப்பட்டு, தனது பதிவு அலுவலகத்தை கொழும்பு வாவட்டத்தில் கொண்டுள்ள, பெயர் மற்றும் வடிவில் "த கண்டி டயர் ஹவுஸ் (பிறைவேட்) லிமிட்டெட்" எனும் மகுடத்தின் கீழ் இயங்கும் கம்பனி, மீள் செலுத்தத்

தவறியுள்ளமையினால் கூறப்பட்ட இலக்கங்கள் 819, 2860, 204, 1252, 2863 மற்றும் 202 எனும் ஈட்டு முறிகளின் பிரகாரம் அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையை இலங்கையில் சட்டபூர்வமாகச் செல்லுபடியாகும் ரூபாவில் ஏழு கோடியே தொண்ணூற்று ஒன்பது இலட்சத்து பத்தாயிரம் ரூபா (ரூ. 7,99,10,000) 2011, சனவரி 10 ஆந் திகதி சம்பத் வங்கி பீஎல்சீ இற்குச் செலுத்தப்படல் வேண்டும் என்பதுடன் குறிப்பிடப்பட்ட ஏழு கோடியே தொண்ணூற்று ஒன்பது இலட்சத்து பத்தாயிரம் ரூபா (ரூ. 7,99,10,000) 2011, சனவரி 11 ஆந் திகதி முதல் இலக்கங்கள் 819, 2860, 204, 1252, 2863 மற்றும் 202 எனும் ஈட்டு முறிகளின் மீது அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தித் தீர்க்கும் திகதி வரை ஏழு கோடியே ஐம்பது இலட்சம் ரூபா (ரூ, 7,50,00,000) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு சராசரிக்கு மேலான கடன் வழங்கும் திட்டத்திற்கு அமைவாக குறைந்த பட்ச வட்டியாக ஆண்டொன்றிற்கு (Average Weighted Primehending Rate per annum) + இரண்டு தசம் ஐந்து வீதமும் (2.5%) (குறைந்த பட்சம் 16%) வருமதியாகவுள்ள வட்டியுடன் விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள், ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக் கொள்வதற்கு கூறப்பட்ட ஈட்டு முறி இலக்கங்கள் 819, 2860, 204, 1252, 2863 மற்றும் 202 இன் மீது பிணையாக வைக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகளை கண்டி உத்தரவுபெற்ற ஏலதாரர்களான ஐ. டபிள்யூ. ஜயசூரிய என்பவர்கள் மூலமாக பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்ய வேண்டும் என 1990 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க வங்கிக் கடன் மீட்பு (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட அதிகாரங்களுக்கு அமைவாக சம்பத் வங்கி பீஎல்சீ இத்தால் தீர்மானிக்கின்றது."

### அட்டவணை

மத்திய மாகாணம், கண்டி மாவட்டம், கண்டி மாநகர சபை எல்லைகளுக்குள் கண்டியில் அமைந்த கொட்டுகொடல்ல வீதி, வரிமதிப்பீட்டு இல. 106A ஐ ஏற்ற காணிக்கு உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் டபிள்யூ. கே. எம். எம். வெலிவிட்ட என்பவரால் தயாரிக்கப்பட்ட 1982, ஒற்றோபர் 02 ஆந் திகதியிடப்பட்ட இல. 1904 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 1 எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன - வடக்கிற்கு : லொட் 02; கிழக்கிற்கு : லொட் 02 ; தெற்கிற்கு : கொட்டுகொடெல்ல வீதி, வரிமதிப்பீட்டு இல. 104 ஐ ஏற்ற வளவை பிரிக்கும் வடிகால் மற்றும் மேற்கிற்கு : கொட்டுகொடல்ல வீதியை பிரிக்கும் பாதையோர மேடை. இவ்எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் ஒன்று தசம் ஐந்து ஆறு இரண்டு பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 1.562பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும் நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் சகல வீதி உரிமைகள், ஏனைய சௌகரியங்கள், வரப்பிரசாதங்கள், உட்பிரவேசங்கள், இரண்டாந்தர மார்க்க உரிமைகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய இணைப்புகளுடன் கூறப்பட்ட இல. 1904 எனும் வரைபடத்திற்கு அமைவாக கண்டி காணிப் பதிவகத்தில் பரிமாணம்/பக்கம் 333/218 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

மேற்கூறப்பட்ட கண்டியில் அமைந்த கொட்டுகொடல்ல வீதி, வரிமதிப்பீட்டு இல. 106 ஐ ஏற்ற கூறப்பட்ட இல. 1904 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 2 எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன - வடக்கிற்கு : கொட்டுகொடெல்ல வீதி, வரிமதிப்பீட்டு இல. 108 ஐ ஏற்ற வளவு ; கிழக்கிற்கு : மதில்; தெற்கிற்கு: கொட்டுகொடல்ல வீதி, வரிமதிப்பீட்டு இல. 104 ஐ ஏற்ற வளவு ; மற்றும் மேற்கு : கொட்டுகொகொடல்ல வீதியை பிரிக்கும் பாதையோர மேடை. இவ்எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் ஏழு தசம் ஐந்து பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 7.5பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும் நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் சகல வீதி உரிமைகள், ஏனைய சௌகரியங்கள், வரப்பிரசாதங்கள், உட்பிரவேசங்கள், இரண்டாந்தர மார்க்க உரிமைகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய இணைப்புகளுடன் கூறப்பட்ட இல. 1904 எனும் வரைபடத்திற்கு அமைவாக கண்டி காணிப் பதிவகத்தில் பரிமாணம்/பக்கம் 400/01 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இல. 819, 2860 மற்றும் 204 எனும் ஈட்டு முறிகளின் மீது பிணையாக அடகு வைக்கப்பட்டுள்ளது.

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், பொரளை வடக்கு மாநகர சபை எல்லைகளுக்குள் வோட் இல. 33 இன் மருதானையில் ஞாணார்த்த பிரதீபா மாவத்தையில் அமைந்த வரிமதிப்பீட்டு இல. 29 (முன்னர் வரிமதிப்பீட்டு இல. 189) ஐ ஏற்ற காணிக்கு உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் வீ. சிற்சபேசன் என்பவரால் தயாரிக்கப்பட்ட 1990, செத்தெம்பர் 13 ஆந் திகதியிடப்பட்ட இல. 1099 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் XLB எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன - வடகிழக்கிற்கு : வரிமதிப்பீட்டு இல.1 ஐ ஏற்ற வளவு மற்றும் பாக். அவனியு; தென்கிழக்கிற்கு : பாக் அவனியு; தென்மேற்கு : ஞாணார்த்த பிரதீப மாவத்தையில் மற்றும் ; வடமேற்கிற்கு : லொட் X1A1 ஆகிய இவ்எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் பதினொன்று தசம் ஆறு இரண்டு பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 11.62பே.) விஸ்தீரணத்தைக் கொணட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும் நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் சகல வீதி உரிமைகள், ஏனைய சௌகரியங்கள், வரப்பிரசாதங்கள், உட்பிரவேசங்கள், இரண்டாந்தர மார்க்க உரிமைகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய இணைப்புகளுடன் கூறப்பட்ட இல. 1099 எனும் வரைபடத்திற்கு அமைவாக தெல்கந்தை காணிப் பதிவகத்தில் பரிமாணம்/பக்கம் A1042/163 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இல. 1252, 2863 மற்றும் 202 எனும் ஈட்டு முறிகளின் மீது பிணையாக அடகு வைக்கப்பட்டுள்ளது.

பணிப்பாளர்கள் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

8-371

---

### 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிச் சட்டம்

"எஸ். ஜீ. லங்கா என்டபிரைசஸ் (பிறைவேட்) லிமிட்டெட்" ஐ நீக்கிவிடுவதற்கான 394 (3) ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

1982ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய 2005.06.16 ஆந் திகதி கூட்டிணைக்கப்பட்ட "எஸ். ஜீ. லங்கா என்டபிரைசஸ் (பிறைவேட்) லிமிட்டெட்" எனும் கம்பனி இயங்காமல் இருப்பதாக அல்லது வியாபாரம் மேற் கொள்ளாமல் இருப்பதாக நியாயமான காரணங்களைக் கொண்டு நம்ப முடிகிறது.

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 394 (3) ஆம் பிரிவின் கீழ் கம்பனிகள் பதிவாளர் மாஅதிபதி டயஸ் கருணாரத்ன ஹெட்டியாராச்சி ஆகிய நான், இத்திகதியிலிருந்து மூன்று மாதங்கள் முடிவடையும்போது ''எஸ். ஜீ. லங்கா என்டபிரைசஸ் (பிறைவேட்) லிமிட்டெட்'' எனும் கம்பனியானது அது ஏன் கலைக்கப்படக் கூடாதென்பதற்கு தகுந்த காரணம் காட்டப்படாதவிடத்து கம்பனிகள் பதிவாளர் மா அதிபதி அலுவலகத்திலுள்ள பதிவேட்டிலிருந்து அதனது பெயர் நீக்கப்பட்டு கம்பனி மூடப்பட்டுவிடும் என்பதற்கான அறிவித்தலை இத்தால் வழங்குகிறேன்.

டி. கே. ஹெட்டியாராச்சி,
கம்பனிகள் பதிவாளர் மா அதிபதி.

பீவி 17291,
கம்பனிகள் பதிவாளர் திணைக்களம்,
"சமாகம் மெதுர"
400, டீ. ஆர். விஜயவர்த்தன மாவத்தை,
கொழும்பு 10,
2011, யூலை 19.

8-228

---

## 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிச் சட்டம்

''கமல் ட்ரேடிங் கம்பனி (பிறைவேட்) லிமிட்டெட்'' ஐ நீக்கிவிடுவதற்கான 394 (3) ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய 1986.05.13 ஆந் திகதி கூட்டிணைக்கப்பட்ட ''கமல் ட்ரேடிங் கம்பனி (பிறைவேட்) லிமிட்டெட்'' எனும் கம்பனி இயங்காமல் இருப்பதாக அல்லது வியாபாரம் மேற்கொள்ளாமல் இருப்பதாக நியாயமான காரணங்களைக் கொண்டு நம்ப முடிகிறது.

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 394 (3) ஆம் பிரிவின் கீழ் கம்பனிகள் பதிவாளர் மாஅதிபதி டயஸ் கருணாரத்ன ஹெட்டியாராச்சி ஆகிய நான், இத்திகதியிலிருந்து மூன்று மாதங்கள் முடிவடையும்போது ''கமல் ட்ரேடிங் கம்பனி (பிறைவேட்) லிமிட்டெட்'' எனும் கம்பனியானது அது ஏன் கலைக்கப்படக் கூடாதென்பதற்கு தகுந்த காரணம் காட்டப்படாதவிடத்து கம்பனிகள் பதிவாளர் மா அதிபதி அலுவலகத்திலுள்ள பதிவேட்டிலிருந்து அதனது பெயர் நீக்கப்பட்டு கம்பனி மூடப்பட்டுவிடும் என்பதற்கான அறிவித்தலை இத்தால் வழங்குகிறேன்.

டி. கே. ஹெட்டியாராச்சி,
கம்பனிகள் பதிவாளர் மா அதிபதி.

பீவி 12968,
கம்பனிகள் பதிவாளர் திணைக்களம்,
"சமாகம் மெதுர"
400, டீ. ஆர். விஜயவர்த்தன மாவத்தை,
கொழும்பு 10,
2011, யூலை 19.

8-229

## செலான் வங்கி ப.வ.க.

(2007 ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்துக்கிணங்க PQ 9 குறிப்பீட்டின்கீழ் பதிவுசெய்யப்பட்டது)

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறிவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ், செலான் வங்கி ப.வ.க. பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட தீர்மானம்

கணக்கு இல. : 0770 - 08703300-001 (கெக்கிராவை கிளை)

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழ், செலான் வங்கி ப.வ.க. பணிப்பாளர் சபையினால் 2010.09.29 ஆந் திகதி நடத்தப்பட்ட கூட்டத்தில் பின்வருமாறு விசேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானிக்கப்பட்டதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது:-

''இபலோகம, பொத்தனவைச் சேர்ந்த ரண்பண்டாகே பிரியந்த ராஜகருணா ''கடனெடுத்தவர்' என்ற வகையில் செலான் வங்கி ப.வ.க. (2007 ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்துக்கிணங்க பீகியூ 9 குறிப்பீட்டின் கீழ் பதிவுசெய்யப்பட்டது) சார்பில் பிரசித்த நொத்தாரிசு சீ. மாயாதுன்னையால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 1998, சனவரி 01 ஆந் திகதிய 432 ஆம் இலக்க, பிரசித்த நொத்தாரிசு டபிள்யூ. எம். கே. கே. வீரக்கோனால் தயாரிக்கப்பட்ட 1998, மார்ச் 14 ஆந் திகதிய 14, 1999, மார்ச் 16 ஆந் திகதிய 72 மற்றும் பிரசித்த நொத்தாரிசு கே. கே. டபிள்யூ. சமரசிங்கவால் தயாரிக்கப்பட்ட 2004, ஏப்பிறல் 21 ஆந் திகதிய 484 ஆம் இலக்க, முறிகளின் மீது வருமதியான கொடுப்பனவுத் தவணை தவறியுள்ளார். ஆதலால், இப்பொழுது 2010, மார்ச் 10 ஆந் தேதியன்றுள்ளவாறு சொல்லப்பட்ட முறிகளின் மீது ஐந்து இலட்சத்து இருபத்தெட்டாயிரத்து எழுநூற்று அறுபத்தேழு ரூபா முப்பது சதம் (ரூ. 5,28,767.30) செலான் வங்கி ப. வ. கம்பனிக்கு உரியதாகச் செலுத்தப்பட வேண்டியுள்ளது. ஆதலால் சொல்லப்பட்ட ரூபா 5,28,767.30 பணத்தொகையையும் 2010, மார்ச் 11 ஆந் தேதி முதல் விற்பனைத் தேதி வரை ஆண்டொன்றுக்கு இருபத்தொன்பது சதவீதப்படி (29%) வட்டியையும் விளம்பரச் செலவுகளையும் உறப்பட்ட வேறு அறவீடுகளையும், அதன் பின்னர் கொடுப்பனவுகள் எவையும் பெறப்பட்டிருப்பின் அவற்றைக் கழித்தும் அறவிடுவதற்காக, சொல்லப்பட்ட 432, 14, 72 மற்றும் 484 ஆம் இலக்க முறிகளினால் செலான் வங்கி ப. வ. கம்பனிக்கு ஈடுவைக்கப்பட்டதும் இதற்கான அட்டவணையில் மேலும் விவரிக்கப்படுவதுமான ஆதன உத்தரவுபெற்ற ஏலதாரர் திரு. துசித கருணாரத்ன என்பவரால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டுமென செலான் வங்கி ப.வ.க பணிப்பாளர் சபை 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் இத்தால் தீர்மானிக்கின்றது''

### அட்டவணை

வடமத்திய மாகாணம், அனுராதபுரம் மாவட்டத்தில் கெலகம் பலாத்தவில் கெலகம் கோறளே வடக்கில் இஹல கெலகம் துலானேயில் கோனபத்திரவவில் அமைந்துள்ள ''கலபிட்டிய கெலே'' என்றழைக்கப்படுவதும் வடக்கில் ' வீதி ஒதுக்கம்; கிழக்கில் : T. P. 219575 இல் உள்ள காணி ; தெற்கில் : அரச காணி மற்றும் ; மேற்கில் : வரைபடம் இல. P. P 198 இல் துண்டுகள் 55Q, 550 மற்றும் 55N ஆகியவற்றை எல்லைகளாகக் கொண்டதும் 3ஏ. 0றூ. 12பே. விஸ்தீரணம் கொண்டதுமான காணியின் ஒரு பகுதியாயுள்ளதும்

உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் கே. கே. சில்வாவால் தயாரிக்கப்பட்ட 1991, ஓகத்து 02 ஆந் திகதிய 333 ஆம் இலக்க வபைடத்தில் "துண்டு இல. 2" எனக் குறிக்கப்பட்டதுமான பிரித்து வரையறுக்கப்பட்ட காணிப்பங்கீடு முழுவதும் அதன்கண் அமைந் துள்ள எல்லாவற்றுடனும். வரைபடம் இல. 333 இன்படி துண்டு 2 இன் எல்லைகள் - வடக்கு : வீதி (அனுராதபுரத்திலிருந்து கெக்கிராவைக்கும்); கிழக்கு : சொல்லப்பட்ட வரைபடத்தில் துண்டுகள் 3 மற்றும் 4; தெற்கு : எச். எம். புஞ்சிபண்டாவின் வயல் ; மேற்கு : சொல்லப்பட்ட வரைபடத்தில் துண்டு 1. இரண்டு றூட் இருபத்தெட்டு தசம் பூச்சியம் ஒரு பேர்ச்சஸ்கள் (0ஏ. 2றூ. 28.01பே. விஸ்தீரணம் கொண்ட இது அனுராதபுர காணிப் பதிவகதிதில் தொகுதி/பக்கம் B 166/185 இன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

சீ.கொட்டிகல,
சிரேஷ்ட பிரதிப்பொது முகாமையாளர் - சட்டம்

8-387

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.